தரமான பொங்கல் பரிசுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்

அமைச்சர்கள், கலெக்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஜன.10

பொங்கல் பரிசு தொகுப்பு குறித்து சமுக வலைதளங்களில் விஷமத்தனமான கருத்துகள் பரப்பப்படுவதாகவும், தரமான பொருட்கள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அமைச்சர்கள், மாவட்ட கலெக்டர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தர விட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கொரோனா பெருந்தொற்றாலும் மழை வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை உவகையுடன் கொண்டாடும் வகையில், கரும்புடன் 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

இதன்படி 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகளில் நமது அரசுக்குப் பெரும் நிதி நெருக்கடி நிலவி வரும் இச்சூழலிலும் மக்களின் நலன்கருதி 1,297 கோடி ரூபாய் செலவில் இத்தொகுப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பொங்கல் பரிசுத் தொகுப்புகள் வழங்கப்படுவதை நானே நேரடியாகச் சென்று நியாயவிலைக் கடைகளில் ஆய்வு செய்தேன். மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்தத் திட்டத்தைப் பற்றிச் சிலர் தவறான விஷமத்தனமான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். எனவே இந்தப் பணிகள் முறையாக நடைபெற்று வருவதையும், தரமான பொருட்கள் எவ்விதப் புகார்களும் இன்றி அனைவருக்கும் கிடைக்கப் பெறுவதையும் நாம் உறுதி செய்ய வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, நியாயவிலைக் கடைகளில் பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கும் பணிகளை, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவரும் தொடர்ந்து கண்காணித்து அனைவருக்கும் தரமான பொங்கல் பரிசுப் பொருள்கள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறிப்பட்டுள்ளது.

ஊரடங்கை பொதுமக்கள் மத்தியில் திணித்து பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதில் முதல்வர் உறுதி

கொரோனா உறுதி செய்யப்பட்டவர்களில் 85 சதவீதம் பேருக்கு ஒமிக்ரான் அறிகுறி

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, ஜன.10

தமிழகத்தில் தடுப்பூசி போட்டுக்கொண்ட பலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், கொரோனாவால் பாதிக்கப்படு பவர்களில் 85 சதவீதம் பேருக்கு ஒமிக்ரான் அறிகுறி இருக்கிறது என்றும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை சைதாப்பேட்டையில் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு தொடர்பாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று ஆய்வு செய்தார். சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் போலீஸ் கமிஷனர் டாக்டர் என்.கண்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

அப்போது நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

இதுவரை நடைபெற்ற ஊரடங்கிலேயே 100 சதவீத வெற்றி என்ற வகையில் இந்த ஊரடங்கு அமைந்திருக்கிறது. தமிழகத்தில் தினசரி 2 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் தொற்று உயர்ந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து இந்த எண்ணிக்கை உயரும் சூழல் நிலவுகிறது. எனவே பொதுமக்கள் தடுப்பு நடவடிக்கைகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

தினசரி உறுதிப்படுத்தப்படும் தொற்றுகளின் எண்ணிக்கையில் 85 சதவீதம் 'எஸ் ஜீன்' குறைபாடாகவும் (ஒமைக்ரான் அறிகுறி), மீதமுள்ள 15 சதவீதம் டெல்டா வகை கொரோனாவாகவும் இருக்கிறது. அந்தவகையில் 'எஸ் ஜீன்' குறைபாடு கண்டறியப்பட்டு எந்த ஒரு அறிகுறியும் இல்லாதவர்களை 7 நாட்கள் வீட்டுத் தனிமையில் வைத்து மாநகராட்சி கண்காணித்து வருகிறது.

60 வயதுக்கு மேற்பட்ட இணை நோயாளிகள், அதிக பாதிப்பு உடையவர்களை மட்டும் ஆஸ்பத்திரிகளில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதுவரை 'எஸ் ஜீன்' குறைபாடு கண்டறியப்பட்ட வர்களில் பலர் 2 தவணை தடுப்பூசி போட்டுக்கொண்ட வர்கள். தமிழகத்தில் 'எஸ் ஜீன்' குறைபாடு காரணமாக யாரும் உயிரிழக்கவில்லை.

இதுவரை 15 முதல் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 22 லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

சென்னை ராஜீவ்காந்தி ஆஸ்பத்திரி, கிண்டி கிங் ஆஸ்பத்திரியில் சுமார் 500 பேர் சிகிச்சையில் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் எந்த ஒரு அறிகுறியும் இல்லாதவர்கள். பொங்கலுக்கு முன்பு இன்னொரு ஆலோசனை கூட்டத்தை ஊரடங்கை பொதுமக்கள் மத்தியில் திணித்து பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதில் முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது: எந்த ஒரு அறிகுறியும் இல்லாமல், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குறைவான பாதிப்பு உடையவர்களை கொரோனா கவனிப்பு மையத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சிகிச்சை தேவையில்லாத பட்சத்தில் நோயாளிகளை சேர்த்து அவர்களுக்கு சிகிச்சை அளித்தால் சம்பந்தப்பட்ட தனியார் ஆஸ்பத்திரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது தமிழகத்தில் 7 சதவீத படுக்கைகள் மட்டுமே நிரம்பி உள்ளன.

பொதுமக்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், 104 கட்டளை மையத்தை தொடர்புகொண்டு பேசலாம். கொரோனா பாதிப்பு எந்த வேகத்தில் ஏறுகிறதோ அதே வேகத்தில் குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ககன்தீப் சிங் பேடி கூறுகையில், 'சென்னையில் நேற்று முன்தினம் மட்டும் முக கவசம் அணியாத 2 ஆயிரத்து 344 நபர்களிடம் ரூ.4 லட்சத்து 90 ஆயிரத்து 900 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. சென்னையில் கடந்த ஒரு வாரத்தில் 15 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு வீட்டுத் தனிமையில் உள்ளனர்' என்றார்.

கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் அலுவலகம் வருவதில் இருந்து விலக்கு: மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, ஜன.10

மத்திய அரசு அலுவலகங்களில் கர்ப்பிணிகளும், மாற்றுத்திறனாளி களும் பணிக்கு வருவதில் இருந்து விலக்கு தரப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மறுபடியும் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இதையொட்டி மத்திய அரசு அலுவலகங்களில் பல்வேறு தரப்பினருக்கு சலுகைகளை வழங்கி மத்திய பணியாளர் நலன் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் ஒரு அறிக்கையை நேற்று வெளியிட்டார். அதில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ மத்திய அரசின் பல்வேறு துறை அலுவலகங்களிலும் கர்ப்பிணிகளும், மாற்றுத்திறனாளிகளும் பணிக்கு அலுவலகங்கள் வருவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. அதே நேரத்தில் அவர்கள் பணி நேரத்தில் வீட்டில் இருந்துபணி செய்ய வேண்டும்.

★ கொரோனா கட்டுப்பாட்டு மண்டல பகுதிகளில் வசிக்கிற அதிகாரிகள், ஊழியர்களுக்கும் அலுவலகம் வருவதில் இருந்து விலக்கு அளிக்கப்படும். அந்த பகுதி கட்டுப்பாட்டு மண்டலமாக இருந்து அகற்றப்படுகிற வரையில் இது தொடரும்.

★ துணைசெயலாளர் நிலைக்கு கீழே உள்ள அதிகாரிகள், பணியாளர்கள் 50 சதவீதம் பேர் பணிக்கு வர வேண்டும். எஞ்சிய 50 சதவீதத்தினர் வீடுகளில் இருந்து வேலை செய்ய வேண்டும்.

★ வீட்டில் இருந்து வேலை செய்கிறவர்கள் பணி நேரத்தில் தொலைபேசியில் மற்றும் மின்னணு தகவல் தொடர்பு மூலம் தொடர்பு கொள்வதற்கு கிடைக்க வேண்டும்.

★ அலுவல்பூர்வமான கூட்டங்களை காணொலிக்காட்சி வழியாக நடத்த வேண்டும்.

★ அலுவலக வளாகங்களில் கூட்ட நெரிசலை தவிர்க்க அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரையிலும், காலை 10 மணி முதல் மாலை 6.30 மணி வரையிலும் இரு பிரிவாக பணிக்கு வரலாம்.

சீசன் டிக்கெட்டுகளில் தடுப்பூசி சான்றிதழ் எண்

சென்னை, ஜன.10

சீசன் டிக்கெட்டுகளில் தடுப்பூசி சான்றிதழ் எண் அச்சிடப்படும் என்று தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வந்த சூழ்நிலையில் இன்று (திங்கட்கிழமை) முதல் மின்சார ரெயிலில் பயணம் செய்பவர்களுக்கு 2 தவணை தடுப்பூசி செலுத்தியிருப்பது கட்டாயம் என நேற்று முன்தினம் தெற்கு ரெயில்வே அறிவித்தது.

அந்தவகையில் சாதாரண பயணிகளும், சீசன் டிக்கெட் வைத்திருக்கும் பயணிகளும், கட்டாயம் டிக்கெட் கவுண்ட்டருக்கு வரும் போதும், மின்சார ரெயிலில் பயணம் மேற்கொள்ளும் போதும் தடுப்பூசி போட்டதற்கான சான்றிதழை கையில் வைத்திருக்க வேண்டும் எனவும், இன்று (10ந்தேதி) முதல் 31ந்தேதி வரை இந்த நடைமுறை அமலில் இருக்கும் எனவும் தெற்கு ரெயில்வே அதன் அறிவிப்பில் தெரிவித்திருந்தது.

வரும் நாட்களில் சீசன் டிக்கெட்டில் தடுப்பூசி சான்றிதழின் கடைசி 4 எண்கள் அச்சிட தெற்கு ரெயில்வே நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழகத்தில் நேற்று 12,895 பேருக்கு கொரோனா

சென்னை, ஜன.10

தமிழகத்தில் 12,895 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. 20 மாவட்டத்தில் பாதிப்பு அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று புதிதாக 1 லட்சத்து 47 ஆயிரத்து 705 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 7,558 ஆண்கள், 5,337 பெண்கள் என மொத்தம் 12 ஆயிரத்து 895 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக சென்னையில் 6,186 பேரும், செங்கல்பட்டில் 1,512 பேரும், கோவையில் 608 பேரும், திருவள்ளூரில் 702 பேரும், காஞ்சீபுரத்தில் 343 பேரும் உள்பட 20 மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்தபட்சமாக அரியலூரில் 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் வெளிநாட்டில் இருந்து வந்த 11 பேருக்கும், வெளிமாநிலங்களில் இருந்து வந்த 41 பேருக்கும், 12 வயதுக்கு உட்பட்ட 351 குழந்தைகளுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 1,750 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதிக ஆபத்தான மற்றும் அதிக ஆபத்து இல்லாத நாடுகளில் இருந்து இதுவரை தமிழகத்துக்கு வந்த 27 ஆயிரத்து 81 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 405 பேருக்கு இதுவரை கொரோனா உறுதி செய்யப்பட்டு, அதில் 264 பேருக்கு 'எஸ் ஜீன்' குறைபாடு (ஒமைக்ரான் அறிகுறி) கண்டறியப்பட்டுள்ளது. அந்த வகையில் தற்போது வரை 21 மாவட்டத்தில் 185 பேருக்கு ஒமைக்ரான் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதில் அனைவரும் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் இதுவரை 28 லட்சத்து 286 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு தமிழகத்தில் அரசு ஆஸ்பத்திரியில் 8 பேரும், தனியார் ஆஸ்பத்திரியில் 4 பேரும் என 12 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர். தமிழகத்தில் இதுவரை மொத்தம் 36 ஆயிரத்து 855 பேர் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்து உள்ளனர். கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 1,808 பேர் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டுள்ளனர். இதுவரையில் 27 லட்சத்து 12 ஆயிரத்து 96 பேர் குணம் அடைந்து உள்ளனர். சிகிச்சையில் 51 ஆயிரத்து 335 பேர் உள்ளனர்.

மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை முன்பாக
I.A.No.311 of 2021
in
IBA/632/2019
திரு. சி. ராமசுப்பிரமணியம்
மெசர்ஸ் இம்ப்பெல் ஹெல்த்கேர் லிமிடெட்டின் கலைப்பாளர்
...விண்ணப்பதாரர்
எதிர்
1. பஞ்சாபகேசன் பிரகாஷ்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
2. தீனா பிரகாஷ்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
...பிரதிவாதிகள்
பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு
I.A.No.311 of 2021 in IBA/632/2019 வழக்கு மீது பிரதிவாதிகளுக்கு உத்தரவு அறிவிப்பை மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, நீதிமன்ற ஹால் II வழங்கி உள்ளது. மேற்கண்ட விளைவு குறித்து தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். அதன்படி, பிரதிவாதிகள் 04.02.2022 **அன்று காலை 10.30 மணிக்கு** நேரிலோ அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவர், பிரதிநிதி, சட்டப் பயிற்சியாளர் அல்லது உங்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக தீர்ப்பாயத்தில் ஆஜராகுமாறு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்த அறிவிப்பை ஏற்று, நீங்கள் கலந்து கொள்ள தவறினால், இந்த விண்ணப்பம் நீங்கள் இல்லாமலேயே விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும்.
8 ஜனவரி, 2022 சென்னையில் தேதியிடப்பட்டது
எஸ். சத்தியநாராயணன்
விண்ணப்பதாரர் ஆலோசகர்
எப்1, பிஆர்பி பிளாக், ரோஸ் பார்க் அபார்ட்மெண்ட்ஸ்,
10, சாந்தி நகர் முதல் குறுக்கு, ஆதம்பாக்கம், சென்னை 600 088

மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை முன்பாக
I.A.No.310 of 2021
in
IBA/632/2019
திரு. சி. ராமசுப்பிரமணியம்
மெசர்ஸ் இம்ப்பெல் ஹெல்த்கேர் லிமிடெட்டின் கலைப்பாளர்
...விண்ணப்பதாரர்
எதிர்
1. பஞ்சாபகேசன் பிரகாஷ்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
2. தீனா பிரகாஷ்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
3. மெசர்ஸ் வேதா மெடிக்கல் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
...பிரதிவாதிகள்
பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு
I.A.No.310 of 2021 in IBA/632/2019 வழக்கு மீது பிரதிவாதிகளுக்கு உத்தரவு அறிவிப்பை மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, நீதிமன்ற ஹால் II வழங்கி உள்ளது. மேற்கண்ட விளைவு குறித்து தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். அதன்படி, பிரதிவாதிகள் 04.02.2022 **அன்று காலை 10.30 மணிக்கு** நேரிலோ அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவர், பிரதிநிதி, சட்டப் பயிற்சியாளர் அல்லது உங்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக தீர்ப்பாயத்தில் ஆஜராகுமாறு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்த அறிவிப்பை ஏற்று, நீங்கள் கலந்து கொள்ள தவறினால், இந்த விண்ணப்பம் நீங்கள் இல்லாமலேயே விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும்.
8 ஜனவரி, 2022 சென்னையில் தேதியிடப்பட்டது
எஸ். சத்தியநாராயணன்
விண்ணப்பதாரர் ஆலோசகர்
எப்1, பிஆர்பி பிளாக், ரோஸ் பார்க் அபார்ட்மெண்ட்ஸ்,
10, சாந்தி நகர் முதல் குறுக்கு, ஆதம்பாக்கம், சென்னை 600 088

மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை முன்பாக
I.A.No.322 of 2021
in
IBA/632/2019
திரு. சி. ராமசுப்பிரமணியம்
மெசர்ஸ் இம்ப்பெல் ஹெல்த்கேர் லிமிடெட்டின் கலைப்பாளர்
...விண்ணப்பதாரர்
எதிர்
1. பஞ்சாபகேசன் பிரகாஷ்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
2. தீனா பிரகாஷ்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
3. ரோகித் பிரகாஷ்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
4. ராகுல் பிரகாஷ்
பிளாட் எண்.3, எச்ஜஜி பிளாக், 58, முதல் தளம், பிளாட்டினம் அபார்ட்மெண்ட்ஸ், கதவு எண்.58/3, அம்பத்தூர் எஸ்டேட் சாலை, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 600 101
...பிரதிவாதிகள்
பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு
I.A.No.322 of 2021 in IBA/632/2019 வழக்கு மீது பிரதிவாதிகளுக்கு உத்தரவு அறிவிப்பை மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, நீதிமன்ற ஹால் II வழங்கி உள்ளது. மேற்கண்ட விளைவு குறித்து தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். அதன்படி, பிரதிவாதிகள் 04.02.2022 **அன்று காலை 10.30 மணிக்கு** நேரிலோ அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவர், பிரதிநிதி, சட்டப் பயிற்சியாளர் அல்லது உங்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக தீர்ப்பாயத்தில் ஆஜராகுமாறு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்த அறிவிப்பை ஏற்று, நீங்கள் கலந்து கொள்ள தவறினால், இந்த விண்ணப்பம் நீங்கள் இல்லாமலேயே விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும்.
8 ஜனவரி, 2022 சென்னையில் தேதியிடப்பட்டது
எஸ். சத்தியநாராயணன்
விண்ணப்பதாரர் ஆலோசகர்
எப்1, பிஆர்பி பிளாக், ரோஸ் பார்க் அபார்ட்மெண்ட்ஸ்,
10, சாந்தி நகர் முதல் குறுக்கு, ஆதம்பாக்கம், சென்னை 600 088

படிவம் ஏ
பொது அறிவிப்பு

(திவால் நிலை மற்றும் திவால் நிலைக்குழுவின் (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மான நடைமுறை) விதிமுறைகள் 2016, விதி 6 - ன் கீழ்)

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் எம்எப்ஜி கோ லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு

	தொடர்புடைய விவரங்கள்	
1.	கார்ப்பரேட் கடனாளர் பெயர்	இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் எம்எப்ஜி கோ லிமிடெட்
2.	கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி	30/11/1960
3.	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு	கம்பெனிகள் சட்டம் 1956–ன் கீழ் துவக்கப்பட்டது மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் ஆர்ஓசி – கோயம்புத்தூரில் பதிவு செய்யப்பட்டுள்ளது
4.	கார்ப்பரேட் அடையாள எண்/ கார்ப்பரேட் கடனாளரின் வரம்பிற்குட்பட்ட அடையாள எண்	L33201TZ1960GOI000379
5.	கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (வேறு ஏதேனும் இருப்பின்) முகவரி	பதிவு அலுவலகம்: இந்து நகர், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம், தமிழ்நாடு – 643 005, இந்தியா
6.	முறையே கார்ப்பரேட் கடனாளரின் திவால் நிலை துவங்கப்பட்ட தேதி	உத்தரவுத் தேதி: 07/01/2022 உத்தரவு பெற்ற தேதி: 07/01/2022
7.	திவால் தீர்மான நடைமுறை மூடும் உத்தேச தேதி	06/07/2022
8.	இடைக்கால தீர்மான நிபுணராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்.	C. பிரபாகரன் IBBI/IPA/-001/IP-P01596/2018-2019/12444
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: மனை எண்.9, கவி கார்டன்ஸ், சாவேரா பள்ளி எதிரில், பியூ அஞ்சல், சோமையம்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 046 Email: cpninsolvency@gmail.com
10.	தொடர்புக்கான இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: மனை எண்.9, கவி கார்டன்ஸ், சாவேரா பள்ளி எதிரில், பியூ அஞ்சல், சோமையம்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 046 Email: cirp.hindphoto@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்க கடைசி தேதி	21/01/2022
12.	பிரிவு 21, உப பிரிவு (6ஏ), உட்கூறு (பி)ன் கீழ் கடன் வழங்கியவர்கள் வகை, வேறு ஏதேனும் இருப்பின் இடைக்கால தீர்மான நிபுணரால் உறுதி செய்யப்பட்டது	பொருந்தாது
13.	வகையின் கீழ் கடன் வழங்கியவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி யாக அடையாளம் காட்டப்பட்ட திவால் நிபுணரின் பெயர் (ஒவ்வொரு வகையிலும் 3 பெயர்கள்)	பொருந்தாது
14.	(a) தொடர்புடைய படிவங்கள் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விவரங்கள் கிடைக்கும்	இணைய இணைப்பு: https://www.ibbi.gov.in/home/downloads முகவரி : பொருந்தாது

மெசர்ஸ்இந்துஸ்தான்போட்டோபிலிம்ஸ்எம்எப்ஜிகோலிமிடெட்டிற்குஎதிராககார்ப்பரேட்திவால்தீர்மானநடைமுறையை துவங்க தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் 07/01/2022 தேதியிட்ட உத்தரவின் மூலம் தெரிவித்துள்ளது என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் எம்எப்ஜி கோ லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்கள் வரிசை எண்.10க்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரிக்கு தங்கள் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் 21/01/2022 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் மின்னணு ஆதாரங்களின் மூலம் மட்டுமே தங்களின் உரிமை கோரல்களை சமர்ப்பிக்க வேண்டும். இதர கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது உரிமை கோரல்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

வரிசை எண்.12க்கு எதிரே பட்டியலிடப்பட்டுள்ள வகையிலுள்ள ஒரு நிதி கடன் வழங்கியவர் வரிசை எண்.13க்கு எதிரே பட்டியலிடப்பட்டுள்ள 3 திவால் நிபுணர்களில் ஒருவரை அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக குறிப்பிடலாம். அவர் படிவம் சிஏ-ல் உள்ள வகையின் (கூறப்பட்ட பிரிவு பொருந்தாது) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக செயல்படுவார்.

தவறான சான்றுகளை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

ஒப்பம்/–
சி. பிரபாகரன்
இடைக்கால தீர்மான நிபுணர்

தேதி : 07.01.2022
இடம் : கோயம்புத்தூர்

படிவம் B
பொது அறிவிப்பு

(திவாலா நிலை மற்றும் திவால் ஒழுங்குமுறை12 (கலைப்பு செயல்முறைகள்) ஒழுங்குமுறைகள் 2016)
கிருஷ்ணா எனர்ஜி பிரைவேட் லிமிடெட்-ன் பங்குதாரர்களின் கவனத்திற்கு

1.	பெருநிறுவன கடன்தாரரின் பெயர்	**கிருஷ்ணா எனர்ஜி பிரைவேட் லிமிடெட்**
2.	கடன் பெற்ற பெருநிறுவனம் இணைக்கப்பட்ட தேதி	05.02.2008
3.	பெருநிறுவன கடன்தாரர் எந்த குழுமத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது/ பதிவு செய்யப்பட்டுள்ளது	கம்பெனிகள் பதிவாளர், சென்னை.
4.	பெருநிறுவன கடன்தாரரின் பெருநிறுவனத்தின் அடையாள எண்	CIN :U40109TN2008PTC066318
5.	பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலக முகவரி மற்றும் முதன்மை அலுவலகம் ஏதேனும் இருந்தால்	DP - 69, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், திருமுடிவாக்கம், சென்னை, தமிழ்நாடு-600 044
6.	நொடிப்பு தீர்மான நடவடிக்கை முடிவுறும் என கணிக்கப்பட்ட தேதி	05.01.2022
7.	பெறுநிறுவன கடன்தாரரின் கலைப்பு ஆரம்ப தேதி	06.01.2022 (உத்தரவு பெறப்பட்ட தேதி 07.01.2022) 06.01.2022 தேதியிட்ட IBA/1075/2019 - இன் உத்தரவு எண் IA/880 (CHE)/2021
8.	கலைப்பாளராக செயல்படும் திவால் வல்லுநரின் பெயர் மற்றும் பதிவு எண்.	B.ரமண குமார் பதிவு எண். IBBI/IPA-001/IP-P00657/ 2017-2018/11140
9.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட கலைப்பாளரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: B.ரமண குமார்,1 வது தளம் (பின்புறம்), 51A (14), Dr. ரங்கா சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004 Email: ramanakumar@ovopaxlegal.com
10.	வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட கலைப்பாளரின் தொடர்புக்கு பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: B.ரமண குமார், 1 வது தளம் (பின்புறம்), வழக்றிஞர் & திவால் வல்லுனர்,51A (14), Dr.ரங்கா சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004 Email: ramanakumar@ovopaxlegal.com
11.	உரிமைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	05.02.2022

தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வின் உத்தரவின் படி **கிருஷ்ணா எனர்ஜி பிரைவேட் லிமிடெட்-ன்** கலைப்பிற்கான செயல்முறைகள் குறியீடு பிரிவு 33-ன் கீழ் **06.01.2022** அன்று ஆரம்பிக்க உத்தரவிட்டுள்ளது என இதன் மூலம் அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

கிருஷ்ணா எனர்ஜி பிரைவேட் லிமிடெட்-ன் பங்குதாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை **05.02.2022** அன்று அல்லது அதற்கு முன்பாக வரிசை எண்.10-ல் குறிப்பிட்டுள்ள கலைப்பாளரின் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்களது உரிமை கோரிக்கைக்கான ஆதாரங்களை மின்னணு மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து பிற கடன்தாரர்கள் தங்களது உரிமை கோரலுக்கான ஆதாரங்களை நேரிலோ, அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னனு வழியாகவோ சமர்ப்பிக்கலாம்.

போலியான அல்லது தவறான ஆதாரங்களை உரிமைகோரலுக்காக சமர்ப்பிப்பது தண்டனைக்கு வழிவகுக்கும்.

கலைப்பாளரின் பெயர் மற்றும் கையொப்பம்
B.ரமண குமார்

நாள் : 08.01.2022
இடம் : சென்னை

பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க், பி2 கட்டிடம், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014
கிளை அலுவலகம்: எண் 30, 2வது தளம், அண்ணாசாலை, லிட்டில் மவுண்ட், மேற்கு சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600015

சுவாதீன அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(4), 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 8(1)வது விதிமுறை கீழ். (பிற்சேர்க்கை IV)

கீழே கையொப்பமிட்டுள்ள மெசர்ஸ் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (பிஎச்எப்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் மெசர்ஸ் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் சார்பாக, கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8–(1)வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்(கள்)/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர் (கள்) பெயர் (LAN எண், கிளை பெயர்)	ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம் (அசையா சொத்து)	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை	சுவாதீன தேதி
கிளை: சென்னை (LAN No. H403HLP0110950 and H403LPT0114102) 1. A P மணிகண்டன் (கடன்தாரர்) 2. M வெண்மதி (உடன் கடன்தாரர்) வசிப்பிடம்: 379/47, 3வது தளம், கங்கா காவேரி பிளாட், 19வது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை, தமிழ்நாடு – 600040 3. வேலம்மாள் எண்டர்பிரைசஸ் (அதன் உரிமையாளர்/அங்கீகாரம் பெற்ற கையொப்பதாரர்/நிர்வாக இயக்குனர்) (உடன் கடன்தாரர்) வசிப்பிடம்: எண். 15/80, 13வது தெரு, திருநகர், வில்லிவாக்கம், சென்னை – 600049	**விவசாயம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்:** தமிழ்நாடு – 600040, சென்னை, அண்ணா நகர் மேற்கு 19வது தெரு, கங்கா காவேரி பிளாட்ஸ், பிளாக் எண்.376 (376/47), ப்ளாட் எண்.47 (3வது தளம்), வடக்கு: TNHB குடியிருப்புகள், கிழக்கு: கடை மனைகள், தெற்கு: ப்ளாட் எண்.379/48 மற்றும், மேற்கு: ப்ளாட் எண்.379/46	05 அக்டோபர் 2021 ரூ.48,70,361/– (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சத்து எழுபதாயிரத்து முன்னூற்று அறுபத்தொன்று மட்டும்)	05 ஜனவரி 2022
கிளை: சென்னை (LAN No. 403HBT62720016 and 403HTP63008210 and 403HTPEB188650) 1. சீனியாச்சாரி சந்திரசேகரன் (கடன்தாரர்) வசிப்பிடம் : எண்.2ஏ, வெங்கடேஸ்வரா நகர், அசோக் நகர் விரிவு, வெள்ளனூர், கோவில்பதாகை, ஆவடி, சென்னை – 600062	**விவசாயம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்:** தமிழ்நாடு – 600062, சென்னை, ஆவடி, கோவில்பதாகை, திருவள்ளூர் மாவட்டம், வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார்பதிவு மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, ''வெங்கடேஸ்வரா நகர்'', கோவில் பதாகை கிராமம், வெங்கடேஸ்வரா நகர் மனை எண்.2ஏ, புதிய எண்.12, பழைய எண். 50–ல் உள்ள காலி நிலம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். கிழக்கு: 20 அடி சாலை, மேற்கு: எஸ். எண்.526/1, வடக்கு: மனை எண்.2பி, தெற்கு: மனை எண்.2ஏ–ன் மீதமுள்ள பகுதி	20 செப்டம்பர் 2021 ரூ.37,74,465/ (ரூபாய் முப்பத்தேழு லட்சத்து எழுபத்துநான்காயிரத்து நானூற்று அறுபத்தைந்து மட்டும்)	05 ஜனவரி 2022
கிளை: சென்னை (LAN No. H403DHB0053439 and H403DHT0053466) 1. சுடர் செல்வா பேச்சி M (கடன்தாரர்) 2. G. சுப்புலட்சுமி (உடன்–கடன்தாரர்) இருவரது வசிப்பிடம் : எப் எண்.4ஜி, சன்ஷைன் அபார்ட்மெண்ட்ஸ், எண்.197/9 அம்பத்தூர் புழல் மெயின் ரோடு, சண்முகாபுரம், கள்ளிக்குப்பம், சென்னை – 600099	**விவசாயம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்:** : சென்னை – 600 099, கள்ளிக்குப்பம், சண்முகாபுரம், அம்பத்தூர் புழல் மெயின் ரோடு, ப்ளாட் எண்.4ஜி, சன்ஷைன் அபார்ட்மெண்ட்ஸ், எண். 197/9, வடக்கு : ஆர்.எஸ்.எண்.198, முன்பு மதனக்குப்பம் சாலை மற்றும் தற்போது பெருமாள் கோயில் தெரு, தெற்கு: ஆர்.எஸ். எண்கள்.197/10ஏ மற்றும் 197/2பி, கிழக்கு:ஆர்.எஸ். எண்கள்.197/2ஏ1சி2 மற்றும் 197 /2ஏ1டி1, மேற்கு : அம்பத்தூர் (புழல்) ரெட்ஹில்ஸ் சாலை	20 செப்டம்பர் 2021 ரூ.37,74,698/ (ரூபாய் முப்பத்தேழு லட்சத்து எழுபத்துநான்காயிரத்து அறுநூற்று தொண்ணூற்று எட்டு மட்டும்)	05 ஜனவரி 2022
கிளை:சென்னை (LAN No. H403ECNO366355 and H403HLP0192154) 1.விமல்குமார் V (கடன்தாரர்) (இறந்ததிலிருந்து சட்டப்பூர்வ வாரிசுகள் மூலம்) வசிப்பிடம்: எண். 1/42ஏ, 5வது பிரதான சாலை, கங்கை நகர், வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு–600042 2. ஷாலினி P (உடன்–கடன்தாரர்) எண். 1/42ஏ, 5வது பிரதான சாலை, கங்கை நகர், வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு–600042	**விவசாயம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்:** தமிழ்நாடு – 600 091, சென்னை, மடிப்பாக்கம், பெரியார் நகர், 9வது தெரு, கணேஷ் ஷெல்டர், கீழ் தளம், பிளாட் எண்.ஜி2. வடக்கு: மனை எண்.42 பகுதி கிழக்கு: மனை எண்.33, தெற்கு: மனை எண்.41, மேற்கு: 30 அடி சாலை	20 செப்டம்பர் 2021 ரூ.49,65,253/ (ரூபாய் நாற்பத்தொன்பது லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்)	04 ஜனவரி 2022

தேதி: 10.01.2022 இடம்: சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்